மாகாணக்கல்வித் திணைக்களம்
வடக்கு மாகாணம்
மூன்றாம் தவணை - 2026

கிறிஸ்தவ நாகரிகம் **Christian Civilization**	**Three Hours** **Gr -12**	**49**	**T**	**I,II**

கவனிக்க.

(1) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

(2) 1 தொடக்கம் 20 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

(3) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (X) இடுக.

பகுதி 1

மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

01. எகிப்து, மொசப்பத்தேமிய, பபிலோனிய நாகரிகங்கள் தோற்றம் பெற்ற காலப்பகுதி

1. கி.மு.40000 2. கி.மு.8000 3. கி.மு.5000 4. கி.மு.3000 5. கி.மு.3500

02. நாகரிகத்தின் இயல்பாகக் கருத முடியாதது

சுதந்திரம் 2. சமத்துவம் 3. சமபங்கேற்பு 4. சுயநிர்ணயம் 5. காலணித்துவம்

03. இஸ்ராயேலர் பபிலோனியாவில் அடிமைகளாக வாழ்ந்த காலப்பகுதி

1. 40 ஆண்டுகள் 2. 60 ஆண்டுகள் 3. 70 ஆண்டுகள் 4. 20 ஆண்டுகள் 5. 450 ஆண்டுகள்

04. கனவுகளுக்குப் பலன்கூறும் பழக்கம் எந்த நாகரிகத்தின் சிறப்பம்சமாகும்?

1. மொசப்பத்தேமிய 2. எகிப்திய 3. கிரேக்க 4. உரோமைய 5. அசீரிய

05. பாலஸ்தீனாவில் புவியியல் அமைப்பில் முக்கோண வடிவிலிருக்கும் சமவெளி

1. சாரோன் சமவெளி 2. எஸ்திரலோன் சமவெளி 3. பெலிஸ்திய சமவெளி
4. செப்பேலா சமவெளி 5. ஆக்கோ சமவெளி

06. கூற்று: யூதர்கள் கலப்புத் திருமணம் செய்துகொண்டமையால் உருவாகிய புதிய இனமே சமாரியர்.

காரணம்: வட அரசை கி.மு.722இல் அசீரியர்கள் கைப்பற்றி அங்குள்ளவர்களை நாடுகடத்தினர்.

1. கூற்றும் காரணமும் சரி 2. கூற்று சரி காரணம் பிழை 3. கூற்று பிழை காரணம் சரி
4. கூற்றும் பிழை காரணமும் பிழை 5. கூற்று காரணத்தை விளக்கவில்லை

07. எபிரோனுக்கு வடக்கேயும் எருசலேமுக்கு தெற்கேயும் அமைந்துள்ள நகர்

1. பெத்சாயிதா 2. பெத்லகேம் 3. பெத்தானியா 4. எப்ரோன் 5. நயீன்

08. யூத சமய வழிபாடுகளில் முக்கியத்துவம் பெற்றது

1. பலி செலுத்துதல் 2. நோன்பு நோற்றல் 3. யாத்திரை செல்லல்
4. செபம்செய்தல் 5. நேர்ச்சைகளை நிறைவேற்றல்

Past Papers Wiki

09. கப்பர்நகூமில் இயேசு செய்த புதுமை

1. முடக்குவாதமுற்றவரைக் குணப்படுத்தியது 2. தண்ணீரை இரசமாக்கியது

3. நயீன் ஊர் கைம்பெண்ணின் மகனைக் குணப்படுத்தியது 4. இலாசரை உயிர்ப்பித்தது

5. சூம்பிய கையை குணமாக்கியது

10. கிரேக்கரின் ஆட்சியில் யூதரின் சட்ட நூலாக அமைந்தது

1. மிஸ்னா 2. மசரொடிக் 3. தால்மூட் 4. வுல்காத்தா 5. செப்துவாஜிந்

11. உரோமைப் பேரரசர்களுள் அடங்காதவர்

1. திபேரியு சீசர் 2. பெஸ்து 3. பெலிக்ஸ் 4. நீரோ 5. தொமீசியன்

❖ பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 12ம், 13ம் வினாக்களுக்கு விடை தருக.

A குடும்பம்	B புளியாத	C பெருஷிம்	D செபம்	E சுக்கோத்
F யாவேயின் விழா	G மிதவாதப்போக்கு	H கெற்றூபா	I யோம்கிப்பூர்	J பிரிந்து நிற்பவர்

12. கூடாரத் திருவிழாவுடன் தொடர்புடையது

1. BF 2. AB 3. HB 4. IJ 5. EF

13. பரிசேயருடன் தொடர்புடைய சோடி

1. GJ 2. CG 3. CJ 4. BD 5. GI

14. சீடத்துவம் பற்றிய படிப்பினைகளைக் குறிப்பிடுகின்ற நற்செய்தி

1. புனித மாற்கு 2. புனித லூக்கா 3. புனித மத்தேயு 4. புனித யோவான்

5. திருத்தூதர்பணிகள்

15. இயேசுவின் காலத்தில் கலிலேயாவில் பேசப்பட்ட மொழி

1. எபிரேயம் 2. இலத்தீன் 3. அரமேயம் 4. கிரேக்கம் 5. அரபு

16. இயேசுவின் சிலுவை மரணத்தின்போது சிலுவை அருகில் நின்றவர்கள்

1. பேதுரு, யோவான், இயேசுவின் தாய்

2. இயேசுவின் தாய், சில பெண்கள், அன்புச்சீடர்

3. இயேசுவின் தாய், திருத்தூதர் தோமா, மகதலா மரியா

4. பேதுரு, மகதலா மரியா, அரிமத்தியா ஊர் யோசேப்பு

5. அன்புச்சீடன், பேதுரு, மகதலா மரியா

17. புனித பவுலின் முதலாவது பயணத் தோழர்கள்

1. பர்னபா, யோவான் மாற்கு 2. சீலா, லூக்கா 3. சீலா, தீமோத்தேயு

4. பர்னபா, லூக்கா 5. சீலா, பர்னபா

18. "கிறிஸ்து உயிருடன் எழுப்பப்படவில்லை என்றால் நாம் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையும் பொருளற்றதாகிவிடும்" எனக்கூறியவர்

1. பேதுரு 2. பவுல் 3. யோவான் 4. நத்தானியேல் 5. இயேசு

Past Papers Wiki

19. பின்வரும் கூற்றுக்களைக் கருதுக.

A - இறுதிக்காலத்தின் தூய்மையின் அடையாளம்

B - சீனாய் மலையில் இறைவன் மோசேக்கு காட்சிகொடுத்ததை எமக்கு நினைவூட்டுகிறது.

C - புதுயுகத்தின் ஆரம்பத்தைக் குறிக்கிறது.

D - திருச்சபையின் பிறப்பைக் குறிக்கிறது.

F - தூய ஆவி இறைவன் என்பதைக் குறிக்கிறது.

இவற்றுள் பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியின் வருகை குறித்து நிற்பவை

1. ABC 2. BCD 3. ACD 4. CDE 5. ABD

20. தொடக்க கிறிஸ்தவர்களை ஏனைய சமூகத்தினரிடமிருந்து வேறுபடுத்திக் காட்டக்கூடிய சிறப்புப் பண்புகளுள் பொருத்தமல்லாதது

1. திருத்தூதர் கற்பித்தவற்றில் நிலைத்திருந்தார்கள்
2. நட்புறவில் நிலைத்திருந்தார்கள்
3. பெரும்பான்மையாக வாழ்ந்த யூதர்கள் மட்டில் பொறாமை கொண்டிருந்தார்கள்.
4. அப்பம் பிடுவதில் உறுதியாக நிலைத்திருந்தார்கள்
5. இறைவேண்டலில் நிலைத்திருந்தார்கள்

(20x1=20 புள்ளிகள்)

பகுதி II

'அ' பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் 'ஆ' பகுதியிலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்க.

'அ' பகுதி

01. 1. கிரேக்க மெய்யியல் சிந்தனைகள் நான்கினைக் குறிப்பிடுக.
2. நாகரிகம், பண்பாடு இரண்டுக்கும் இடையிலான ஒற்றுமை, வேற்றுமை இரண்டு தருக.
3. பாலஸ்தீனாவின் புவியியல் பின்னணியோடு யோர்தான் நதியின் தொடர்புபற்றி விளக்குக.
4. இஸ்ராயேல் வரலாற்றில் சவுல் அரசனின் முக்கியத்துவம் பற்றி கலந்துரையாடுக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

02. 1. புனித பவுல் 2ம் மறைதூதுப்பயணத்தில் சென்ற இடங்கள் 4 தருக.
2. எருசலேம் சங்கத் தீர்மானங்கள் 4 இனைக் குறிப்பிடுக.
3. பெந்தக்கோஸ்தே விழாபற்றி விளக்குக.
4. இறையாட்சிபற்றிய உவமைகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

03. 1. புனித பேதுருவின் முதல் உரையின் சாராம்சங்களைக் குறிப்பிடுக.
2. தூய ஆவியின் வருகையுடன் இடம்பெற்ற நிகழ்வுகள் 4இனைக் குறிப்பிடுக.
3. திருச்சபையின் முதல்நியமனம்பெற்ற பணியாளர்கள்பற்றிக் குறிப்பிடுக.
4. புனித பவுல் மறைதூதுப் பயணங்களில் எதிர்கொண்ட சவால்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(2+4+6+8=20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI

‘ஆ’ பகுதி

04. 1. மேலைத்தேய நாகரிகங்கள் எவ்வாறு கிறிஸ்தவ நாகரிகத்தின் வளர்ச்சியில் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதுபற்றி கலந்துரையாடுக.

2. இன்று எமது நாட்டில் ஏற்படுகின்ற கலாசார சீரழிவுக்கான காரணங்களை முன்வைத்து விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

05. 1. எபேசியருக்கு எழுதிய திருமடலில் ‘கிறிஸ்தவ குடும்ப வாழ்வு’ பற்றிய புனித பவுலின் படிப்பினைகளை விளக்குக.

2. இன்றைய குடும்பங்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் அவற்றை மேற்கொள்வதற்கான வழிமுறைகளையும் முன்வைக்குக.

(10+10=20 புள்ளிகள்)

06. 1. சீடத்துவ வாழ்வுபற்றிய இயேசுவின் படிப்பினைகளை விபரிக்குக.

2. சீடத்துவ படிப்பினைகளை வாழும்போது எதிர்கொள்ளக்கூடிய சவால்களைக் குறிப்பிட்டு விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

07. 1. இறையரசின் அடையாளமாக புதுமைகள் செய்யப்பட்டதற்கான காரணங்களையும் இயேசுவின் நான்கு வகைப் புதுமைகளையும் குறிப்பிட்டு விளக்குக.

2. நம்பிக்கையின் அடிப்படையில் உமது ஆன்மீக வாழ்வைக்கட்டியெழுப்ப நீர் மேற்கொள்ளக் கூடிய செயற்பாடுகளை முன்வைத்து விளக்குக.

(10+10=20 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi
Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library